

# திருப்புன்கூர் தலவரலாறு



ராஜகோபுரம்

ஏழாம் பதிப்பு ]　　1962.　　[ விலை 20 காசு.



நந்தனருக்காக விலகிய நந்தி

# முன்னுரை

திருப்புன்கூர் என்னும் இத்தலம் வைத்தீஸ்வரன் கோயில் என்னும் தலத்தின் மேற்கே சுமார் ஒன்றரைக்கல் தொலைவில் விளங்குகிறது. தல விருக்ஷம் **புங்கு** ஆதலால் **திருப்புங்கூர்** எனப் பெயர் பெற்றது. நந்தனர் என்கிற திருநாளைப் போவார் நாயனர் இத்தலத்துக்கு வந்து வெளி நின்று சுவாமி தரிசனம் செய்யுங்கால் இறைவன் திரு நந்திதேவரைச் சற்று விலகச்செய்து காட்சிதந்தருளிய சிறப்பினை உடையது. ஆலயத்தின் மேம்பால் விளங்கும் திருக்குளத்தை வெட்டித் திருப்பணி புரிந்ததும் இந் நாயனரேயாவர். இத்தலத்தின் வடபாலுள்ள திருப்பெருமங்கலத்தில் திருவவதாரஞ் செய்த ஏயர்கோன் கலிக்காம நாயனரும் இத்தலத்தில் அதிகமான திருப்பணிகள் செய்து வழிபட்டுள்ளார். இறைவன் திருநாமம் **சிவலோகநாதர்;** இறைவி **சொக்கநாயகி;** திருஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர்களும் பாடிய ஸ்தலம்.

திருச்சிற்றம்பலம்.

# "PRELUDE"

"THIRUPPUNGUR" as it is called, is famous for its Siva Temple. The name and fame of this temple is unique in the annals of the ancient history of Tamil Nad. Gnanasambandar, Sundaramoorthy Nainar and Thirunavukkarasu have sung the glories of the main deity Sri Sivaloganathar. The place has all the unique features of a sacred place namely, THALAM, MOORTHY and THEERTHAM. The art and architecture, Cleanliness and compactness the purity and sanctity of this temple together with its historical and mythological importance attract the men and women from far and near.

The biggest Nandhi, huge in size and rich in style and architecture moved aside in order to answer the call of the great Harijan Saint Nandanar, so that he may have the clear Dharsan of Sri Sivaloganathar. The one and the only epic of this kind has taken place at this sacred place. Nandanar, who had made up his mind to leave behind a permanent mark of honour and homage to the temple, prayed at the altar of Sri Sivaloganathar. Thereupon the blessings of God, came in the shape of Vigneswarar, who with the help of demons, made a biggest tank in the backside of the temple in one night which is named after 'Nandanar". There is another tank in the front side of

the temple, which is named after Indira, who has also said to have worshipped in this ancient shrine.

Sundaramoorthy, during his pilgrimage to this place, paid a voluntary visit to Kallikkanar's house at Perumangalam, the adjoining village and their misunderstandings were cleared and they have made considerable improvements in this temple into hand in hand. Sundarar was able to convince the then Chola King and got 24 velis of land in the name of God, for getting rains in the famine - sticken Chola region. The songs of Sundarar are there to prove the episode.

The proverbial seven virgins, Agasthiar, Brahma, Indra, Rajendra Chola, Chandran, Sooryan, Pathanjali, Vyagrapadhar, Chirsabesa Cholar, Viranmeendanayanar, Kallikkanar and Nandanar have worshipped in this place. The timely and splendid blessings of God can be had by all in all places and at all times. But to see, to enjoy and worship in this particular place will be a red letter day in anybody's life.

The latest thiruppani was done by Sri T. K. M. Chidambaram Chettiar of Kanadukathan before 50 years at a cost of nearly 5 lakhs. The temple was brought into the control of Kumbakonam Temple committee in the year 1938 when a Paid Officer was appointed as per scheme framed thereunder.

Now the temple is uuder the immediate control of the H. R. & C. E. (Adm.) Department and there are three trustees namely T. RM. CT. Lakshmanan Chettiar, S. N. Sreenivasa Reddiar, G. Radhakrishnan, M. A. B. L., and an Executive Officer to look after the administration.

Executive Officer.

# திருப்பணிக் குறிப்புகள்.

தமிழ் மன்னர்கள் காலத்திலே கட்டப்பட்டதாகக் கருதப்படும், இந்தக் கோவில், கலைவளர்க்கும் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த கானாடுகாத்தான் தூ. கரு. சிதம்பரஞ் செட்டியாரால் சுமார் 5 லட்ச ரூபாய் செலவில் கருங்கல் திருப்பணி செய்யப்பட்டு கீலக ஆண்டு ஆனித்திங்கள் 8-ம் நாள் (21-7-1908) மகா கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டு கருத்துக்கும், காட்சிக்கும், பெருவிருந்தாக அமைந்துளது. இந்தத் திருப்பணியை முன்னிட்டு மேற்படி செட்டியார் பரம்பரையில் ஒருவர் எப்பொழுதும் தர்ம கர்த்தாவாக நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

பின்பு கர ஆண்டு, சித்திரைத்திங்கள் 28-ம் நாள் (11—5—1951) கோவில் மேல் தளம் பழுது பார்க்கப் பட்டு, திருத்துவன திருத்தி, அப்பொழுது நிர்வாக அதிகாரியாக பணியாற்றிய திரு. P. முத்துச்சாமி அவர்கள் பெருமுயற்சியாலும், ஒரே தர்மகர்த்தாவான திரு. T. RM. CT. ராமசாமிச் செட்டியார் அவர்கள் பேராதரவாலும், அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்துவைக்கப்பட்டது.

பின்பு நந்தவனச் சுற்றுச்சுவர், ஆலய மதில்சுவர் முதலியன பழுது பார்க்கப்பட்டன..

சென்றஆண்டு மூவர், (அப்பர், சுந்தரர், சம்பந்தர்) பாடிய தேவாரத் திருப்பதிகங்கள், பளிங்குக் கற்களிலே பொறிக்கப்பட்டு, அறநிலையத் துறை ஆணையாளர் உயர்திரு. அ. உத்தண்டராமன் B. A. B. L., I. A. S. அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. நந்தனூர் திருக்குளத்

தின் புதுப்பித்த படித்துறையும், திருநாளைப் போவார் நூல் நிலையமும், அவர்களாலேயே திறந்துவைக்கப்பட்டன.

"தேரடியிலே நின்று தரிசித்த நந்தனுருக்குத் தேரடியிலே ஓர் ஆலயம் இல்லையே" என்று பக்தியிற் சிறந்த பலரும் எண்ண, அவ்வண்ணமே, சிதைந்து, மறைந்துபோன பழைய தேரடியைப் புதுப்பித்து, அதன் அருகே "நந்தனுர் ஆலயம்" ஒன்று அமைத்து விளம்பி ஆண்டு ஆவணித்திங்கள் 28-ம் நாள் (13—10—59) மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

நிர்வாக அதிகாரியின் புதிய அலுவலகம் ஒன்று வேலை ஆரம்பிக்கப்பட்டு 11—2—60 அன்று முற்றுப் பெற்றுள்ளது.

ஆலய வருவாய்:

ஆண்டு ஒன்றுக்கு சுமார்ரூ. 30,000/-மிகுதியான வரவு, ஆலயத்திற்கு சொந்தமான நஞ்சை நிலங்களிலிருந்துதான். மணைப்பகுதி, முதலீடுகளிலிருந்து வட்டி வரவு, அர்ச்சனை சீட்டு விற்றுமுதல் வரவு, கட்டிட வாடகை வரவு போன்ற சில்லரை வருவாய்களும் உண்டு.

---

இத்தலத்தில் ஆண்டுதோறும் வைகாசி விசாக உற்சவம் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருப்புன்கூர்

# ஸ்தல புராண வசன ஸங்க்ரஹம்

### விநாயகர் வணக்கம்

பூமேவு புத்தேளும் பூமேவு மாதவனும் போற்றெம் மானைத், தாமேவு மொரு மதத்த னென்றிடமும் மதத்த னெனச்சண்மதத்தார், நாமேவிப் புகலவன்றனக்கு மேலோனெனவே நண்ணுகின்ற, மாமேவு குஞ்சரமா முகவனிரு செஞ்சரணை வணங்கி வாழ்வோம்.

### சிவலோகநாதர் துதி

விரும்புன்கூ ரடியென்னுந் தொழும்பர் தமக் கருள் தழைந்து விணைக்கீடாக, கரும்புன்கூர் பவப்பிணிக ளணுகா மலுத்தமாங் கத்தின்மீது, மருப்புன்கூர் வரை கோலால் புண்ணியத்தை வரைந்திருமை வாழ்வளிப்பத் திருப்புன்கூ ரிடைமேவுஞ் சிவலோக நாயகன்றாள் சென்னி சேர்ப்பாம்.

### சௌந்தரநாயகியம்மை துதி

அலைமகளாய்க் கலைமகளாய்த் துற்கை யாதி யைஞ் சத்தியென மறைகளறைய நின்ற, மலைமகளாயுதித்துநவ ராத்திரிக்கண் மாவிரத முற்றது யார் வகுக்கவல்லார் அலைமகளும் கலைமகளும் கண்ணயன்னார் கண்மணியா யவர்க்கருளு மழகுமீந்து, தலைமகளா யிலங்கிநின்ற விணையாரென்னுஞ் சௌந்தரநாயகி மலர்த்தாள் தலை மேற் கொள்வாம்.

### நந்திகேச்சுவரர் துதி

மசவண்ணப் பண்பொருவி மகியுளோர் முறைமுடி வாழ் வள்ளல் தாளி னிசவண்ண முதுக்குறைவுற் றிட வடியார்க் கடிமையுறு நேயம் பொங்க, தசவண்ண வங்க முறு கல்யாண புரியினிடைச் சாதமுற்ற, வரவண்ணப் பெருமாளு நந்திகேச்சுரன் மலர்த்தாள் மன்னிவாழ்வாம்.

சிவமயம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் — தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்தமில்லா வடிக ளவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே. 1

மூவ ராய முதல்வர் முறையாலே
தேவ ரெல்லாம் வணங்குந் திருப்புன்கூர்
ஆவ ரென்னு மடிக ளவர்போலும்
ஏவி னல்லா ரெயில்மூன் றெரித்தாரே. 2

பங்க யங்கண் மலரும் பழனத்துச்
செங்க யல்கள் திக்குந் திருப்புன்கூர்க்
கங்கை தங்கு சடையா ரவர்போலும்
எங்க ளுச்சி யுறையும் மிறையாரே. 3

கரையு லாவு கதிர்மா மணிமுத்தம்
திரையு வாயு வயல்சூழ் திருப்புன்கூர்
உரையி னல்ல பெருமா னவர்போலும்
விரையி னல்ல மலர்ச்சே வடியாரே. 4

பவன வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ண முறையுந் திருப்புன்கூர்
அழக ரென்னு மடிக ளவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே. 5

தெரிந்தி லங்கு கழுநீர் வயற்செந்நெல்
திருந்த நின்ற வயல்சூழ் திருப்புன்கூர்ப்
பொருந்தி நின்ற வடிக ளவர்போலும்
விரிந்தி லங்கு சடைவெண் பிறையாரே. 6

பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்கொள் வீதி விழவார் திருப்புன்கூர்
ஆர நின்ற வடிக ளவர்போலும்
கூர நின்ற வெயின்மூன் றெரிந்தாரே. 7

மலைய தனா ருடைய மதில்மூன்றும்
சிலைய தனா லெரித்தார் திருப்புன்கூர்த்
தலைவர் வல்ல வரக்கன் றருக்கினை
மலைய தனா லடர்த்து மகிழ்ந்தாரே. 8

நாட வல்ல மலரான் மாலுமாய்த்
தேட நின்றா ருறையுந் திருப்புன்கூர்
ஆட வல்ல வடிக ளவர்போலும்
பாட லாடல் பயிலும் பரமரே. 9

குண்டு முற்றிக் கூறை யின்றியே
பிண்ட முண்ணும் பிராந்தர் சொற்கொளேல்
வண்டு பாட மலரார் திருப்புன்கூர்
கண்டு தொழுமின் கபாலி வேடமே. 10

மாடம் மல்கு மதில்சூழ் காழிமன்
சேடர் செல்வ ருறையுந் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே. 11

திருச்சிற்றம்பலம்.

---

உ
சிவமயம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பிறவாதே தோன்றிய பெம்மான் றன்னைப்
பேணாதாரவர் தம்மைப் பேணா தானைத்

துறவாதே கட்டறுத்த சோதியானைத்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்றான் றன்னைத்
திறமாய வெத்திசையுந் தானே யாகித்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நிறமா மொளியானை நீடூரானை
நீதனேன் என்னேநான் நினையாவாறே. 1

பின்றானு முன்றானு மானான் றன்னைப்
பித்தர்க்குப் பித்தனாய் நின்றான்றன்னைச்
நன்றாங் கறிந்தவர்க்குந் தானே யாகி
நல்வினையுந் தீவினையு மானான் றன்னைச்
சென்றோங்கி விண்ணளவுந் தீயா னானைத்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நின்றாய நீடூர் நிலாவி னானை
நீதனே னென்னேநான் நினையாவாறே. 2

இல்லானை எவ்விடத்து முள்ளான் றன்னை
யினிய நினையாதார்க் கின்னா தானை
வல்லானை வல்லடைந்தார்க் கருளும் வண்ணம்
மாட்டாதார்க் கெத்திறத்து மாட்டா தானைச்
செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நெல்லால் விளைகழனி நீடூ ரானை
நீதனே னென்னேநான் நினையாவாறே. 3

கலைஞானங் கல்லாமே கற்பித் தானைக்
கடுநரகஞ் சாராமே காப்பான் றன்னைப்
பலவாய வேடங்கள் தானே யாகிப்
பணிவார்கட் கங்கங்கே பற்றா னானைச்
சிலையார் புரமெரித்த தீயா டியைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிலையார் மணிமாட நீடூ ரானை
நீதனே னென்னேநான் நினையாவாறே. 4

நோக்காதே யெவ்வளவும் நோக்கி னானை
நுணுகாதே யாதொன்று நுணுகி னானை
ஆக்காதே யாதொன்று மாக்கி னானை
யணுகாதா ரவர்தம்மை யணுகா தானைத்
தேக்காதே தெண்கடனஞ் சுண்டான் றன்னைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நீக்காத பேரொளிசேர் நீடு ரானை
நீதனே னென்னேநான் நினையா வாறே. 5

பூணலாப் பூணானைப் பூசாச் சாந்த
முடையானை முடைநாறும் புன்க லத்தில்
ஊணலா ஊணானை யொருவர்காணா
வுத்தமனை யொளிதிகழு மேனி யானைச்
சேணுவாஞ் செழும்பவளக் குன்றொப் பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நீணுலா மலர்க்கழனி நீடூ ரானை
நீதனே னென்னேநான் நினையா வாறே. 6

உரையார் பொருளுக் குலப்பி லானை
யொழியாமே யெவ்வுயிரு மானான் தன்னைப்
புரையாக் கனமாயாழ்ந் தாழா தானைப்
புதியனவு மாய்மிகவும் பழையான் தன்னைத்
திரையார் புனல்சேர் மகுடத் தானைத்
திருப்பன்கூர் மேவிய சிவ லோகனை
நிரையார் மணிமாட நீடூ ரானை
நீதனே னென்னேநான் நினையா வாறே. 7

கூராவத் தணையானுங் குளிர்தண் பொய்கை
மலரவனுங் கூடிச்சென் றறிய மாட்டார்
ஆரொருவ ரவர்தன்மை யறிவார் தேவ
ரறிவோமென் பார்க்கெல்லா மறிய லாகாச்
சீரரவக் கழலானை நிழலார் சோலைத்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை

நீரரவத் தண்கழனி நீடூ ரானை
நீதனே னென்னேநான் நினையா வாறே. 8

கையெலாம் நெய்பாயக் கழுத்தே கிட்டக்
கானிமிர்த்து நின்றுண்ணுங் கையர் சொன்ன
பொய்யெலாம் மெய்யென்று கருதிப் புக்கும்
புள்ளுவரா லகப்படா துய்யப்போந்தேன்
செய்யெலாஞ் செழுங்கமலப் பழன வேலித்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நெய்தல்வாய்ப் புனற்படப்பை நீடூ ரானை
நீதனே னென்னேநான் நினையா வாறே. 9

இகழுமா றெங்ஙனே யேழை நெஞ்சே
யிகழாது பரந்தொன்றாய் நின்றான் தன்னை
நகழமால் வரைக்கீழிட் டரக்கர் கோனை
நலனழித்து நன்கருளிச் செய்தான் றன்னைத்
திகழுமா மதகரியி னுரிபோர்த்தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நிகழுமா வல்லானை நீடூ ரானை
நீதனே னென்னேநான் நினையா வாறே. 10

திருச்சிற்றம்பலம்

---

உ
சிவமயம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

பண் — தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக்காப்பது காரணமாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்

இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே

வையக முற்று மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
வொளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளஞ்
செய்கை கண்டுநின் திருவடியடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன் கூருளானே. 2

ஏத நன்னில மீரறு வேலி
யேயர்கோ னுற்ற விரும்பிணி தவிர்த்துக்
கோதா னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன் றன்மேற் சென்ற
தாதை தாளற எறிந்ததண் டிக்குன்
சடைமிசை மல ரருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்
பூம்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. 3

நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானுங்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்ல னென்றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே 4

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளரவு சுற்றிக் கடைந் தெழுந்த

ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார் கடல் விடந்தனை யுண்டு
கண்டத்தே வைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. 5

இயக்கர் கின்னரர் யமனொடு வருண
ரியங்கு தீவளி ஞாயறு திங்கள்
மயக்க மில்புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் றிருவடி யதனை
யர்ச்சித் தார்பெறு மாரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. 6

போர்த்த நீள்செவி யாளரந்தணர்க்குப்
பொழில்கொள் ஆல்நிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளினாய்ப் பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்துவந் திழியும் புனற்கங்கை நங்கை
யாளை நின் சடைமிசைக் கரந்த
தீர்த்தனே நின்றன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. 7

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரி
லிருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
யொருவ நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவதேவநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. 8

அறிவி னால்மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க் கங்கே யாரருள் புரிந்து
எறியு மாகட லிலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. 9

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானை
உம்ப ராளியை யுமையவள் கோனை
யூரன் வன்றொண்ட னுள்ளத் தாலுகந்
தன்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோ
டைந்தும் வல்லவ ரருவினை யிலரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## நைமிசப் படலம்.

ஆதியில் சப்த ரிஷிகளுஞ் சேர்ந்து பூலோகத்தின்கண் தாமிருந்து தவஞ்செய்வதற்கு ஓரிடத்தைக் காண்பிக்கும்படி இவ்வண்டங்கள் முதல் யாவற்றையும் படைக்கும் நான்முகனிடம் சென்று கேட்க அவர் தர்ப்பையினால் ஓர் சக்கரத்தைச் செய்து பூமியின்கண் உருட்டி அது சென்று தங்கும் வனமே அவர்கள் தவஞ் செய்வதற்குரியது என்று அருளினார். முனிவரும் வணங்கி அச்சக்கரம் சென்ற வழியே சென்றனர். முடிவில் அது தங்கிய வனத்தையடைந்து தவஞ்செய்து வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு அவ்வனம் நேமியால் காண்பிக்கப்பட்டதனால் அதற்கு

நைமிசாரண்யம் என்று பெயர் வந்தது. அங்ஙன மிருக்க ஓர் நாள் அவ்விடத்திற்கு சகல வேதாகமபுராண விற்பன்னரான சூதபுராணிகர் வந்து சேர்ந்தார். முனிவர்கள் எழுந்து சூதபுராணிகரை, வணங்கி அர்க்கிய பாத்ய ஆஜமனுதிகள் செய்வித்து ஆசனம் கொடுத்து அமரச் செய்தனர். புராணிகரும் முனிவருக்கு ஆசி கூறினுர். பூவுலகிலுள்ள சகல புராணங்களேயும், தலங்களின் மேன்மைகளேயும், அவைகளிற் சிறந்தவை களேயும் எங்களுக்கு அருளவேண்டு மென்று முனிவர் பிரார்த்திக்க அவனியிலுள்ள தலங்களனேத்திலும் கரிஞ்சாரண்யமே மிகவும் மேலான தலம் என்று சொல்லி அதன் மகிமைகளே உரைக்கலானுர்.

---

## தல விசேஷப் படலம்.

கரிஞ்சாரண்யம் என்னும் இத்தலம் நாவலந் தீவிற்கோர் திலகம் போன்றது. பல்வளங்களும் பொருந் தியது. தலம், மூர்த்தி, தீர்த்தம் என்னும் மூன்று விசேஷங்களும் ஒருங்கே அமையப்பெற்றது. இத்தலத் தின் சரிதத்தை ஒருமுறை கேட்பவர் இகபர சாதனங் களே இலகுவில் அடைவர். அரோக திடசரீரத் தோடமைவர், ஒரு நாள் இத்தலத்தில் தங்கினுலுள்ள பலன் அளவிடற்கரியதாகும். ஸ்தூல லிங்கமாகிய கோபுரதெரிசன மாத்திரத்தில் தீர்தற்கரிய மகா பாவங் களும் தீரும். இத்தலத்தில் விளங்கும் சுயம்பிரகாச இலிங்காசமாகிய ஸ்ரீ சிவலோகேசனே பிரம்மாதிதேவர் களும் பூசித்து அவரவர்க்குற்ற சாபங்களே நீக்கிக் கொண்டனராதலால் மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொரு வரும் தெரிசித்து நற்கதி அடைய வேண்டி ஸ்ரீசௌந்தர நாயகி யம்மையோடு வீற்றிருக்கின்றுர்.

## பிரம்மா பூசித்த படலம்.

முன்னொரு காலத்தில் கைலை மலையில் சாக்ஷாத் பரமேசுவரன் உமாதேவியோடு வீற்றிருக்கையில் பிரம்மதேவர் சென்றார். அந்த ஈசுவரனைப்போலவே மற்றும் அநேகர் இருக்கக்கண்டு பிரமித்து அதன் காரணத்தை அறியமாட்டாதவராய்த் திகைத்து நின்றார். சிவபெருமான் அங்ஙனம் திகைத்து நிற்கும் நான்முகனை நோக்கிக் கூறுவராயினர் "பூலோகத்தின்கண் கரிஞ்ச வனம் (புங்கவனம்) என்று ஒரு தலம் உளது அந்த இடத்தில் சௌந்தரநாயகி பூசனைக்காக பரஞ்சுடர் இலிங்கம் ஒன்று தோற்றுவித்துப் பஞ்சாக்கர உருவின் மயமாய் ஐந்து இலிங்கங்களையும் அருளியிருக்கின்றோம் அன்றியும், அத்தலத்தில் நாம் உமையவளோடு ஸ்நானம் செய்யும் பொருட்டு கைலையிலுள்ள இடப தீர்த்தத்தையும் நிலை பெறச் செய்திருக்கின்றோம். அத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து விதிப்படி அங்குள்ள சிவலோகேசனையும் சௌந்தரநாயகியையும் வணங்கி தரிசிப்பவர் நமது சாரூப பதவியை அடைவர்" என்றதைக் கேட்டவுடன் பிரமதேவர் ஆனந்தபரிதராகி தக்ஷணமே சரஸ்வதியோடு அன்னவாகனமேறித் திருப்புன்கூர் என்னும் தலத்திற்கு வந்து இடப தீர்த்தத்தில் நீராடி ஆலயத்தினுட் சென்று, சிவலோகேசனையும் சௌந்தரநாயகியையும் கண்டு, அபிஷேக நிவேதன அருச்சனை முதலியன செய்து, தோத்தரித்த அளவில் சிவபிரானால் காட்சியருளி பஞ்சாக்ஷர உபதேசம் செய்யப்பெற்று விடைகொண்டு தமது சத்தியலோகஞ் சேர்ந்தார்.

---

## இந்திரன் பூசித்த படலம்.

பண்டு இந்திரன் கௌதமமுனிவரின் பத்தினி யாகிய அகலிகை என்னும் மாதின்பால் காதல்கொண்டு

சோரஞ் செய்ததால் கௌதமமுனியினுல் ஆயிரம் யோனியாக சாபம் பெற்று மனங்கலங்கித் தன் குருவைக்கண்டு சாபம் தீரும் வகையைக் கேட்க அவர் க்ஷேத்திராடனம், தீர்த்தாடனம் செய்து தீர்த்துக் கொள்க என்றபடி இப் புவியின்கண்ணுள்ள தலங்களை ஒவ்வொன்ருகத் தரிசித்து வருமளவில் இக் கரிஞ்சவனத்தைக் கண்டு மனமகிழ்ந்து தன் பெயரால் தீர்த்தமொன்றுண்டாக்கி அதிலும் இடப தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து முறைப்படி ஸ்ரீ சிவலோகநாதரையும் சௌந்தரநாயகியையும் பூசை செய்து நிற்கையில் எம்பிரான் காட்சியருளி "இந்திரன் சாபத்தை நீக்கி வருடந்தோறும் நீ நமக்குத் திருவிழா செய்வாயாக" என்று கட்டளையிட்டார். அவ்வண்ணமே தேவேந்திரன் மனமுவந்து வைகாசி மாதம் விசாகத்தன்று திருவிழா செய்து தனது லோகஞ்சென்று ஆண்டுதோறும் தவருது இயற்றி வருவானுயினன்.

---

## அகத்தியர் பூசித்த படலம்.

பார்வதியின் சுயம்வரகாலத்தில் பிரம்மாதி தேவர் முதல் யாவரும் இமயகிரிக்கேக, தென்திசை உயர்ந்து வடதிசை தாழ்ந்தது. அப்போது மகாதேவன் அகத்திய முனிவரை நோக்கி, நீர் தென்றிசை சென்று கரிஞ்சாரண்யத்தை அடைந்து பூமியைச் சமப் படுத்துவீரென்று விடைகொடுத்தருளிய வண்ணம் குறு முனியும் ஈசனுணைப்படியே விந்திய மலையைக் கடந்து கரிஞ்சாரண்யம் என்னும் திருப்புன்கூர் அடைந்து இடப தீர்த்தமாடி சிவலோக நாதரைத் தரிசித்து பஞ்சாக்ஷர உரு பன்னீராயிரம் ஜபித்து நிஷ்டை கூடினுர். ஈசனும் மனமகிழ்ந்து அவருக்குக் கல்யாண கோலம் காட்டியருள அகத்திய முனியும் அது கண்டு ஆனந்தம்கொண்டு பூசையை முடித்துத் தோத்திரம்

செய்து அடுத்த தலத்தில் தன் பெயரால் சிவலிங்கம் ஸ்தாபித்து, திருமறைக் காட்டிற்குச் சென்றார்.

---

## பன்னிருவேலிபெற்ற படலம்.

இக்கலியுகாரம்பத்திலே சிலகாலம் உலகெங்கும் மழை பொழியாதொழிந்தது, க்ஷாமம் மிகுந்தது. ஜீவராசிகள் அனைத்தும் தவித்தன. சோழ மண்டலத்திலுள்ள ஜனங்கள் யாவரும் அக்காலத்தரசாண்ட இராஜேந்திர சோழனிடம் சென்று முறையிட, மன்னனும் கலங்கி யாது செய்வதென்று தோன்றாது தன் தேசத்திலுள்ள சிவாலயங்களிலெல்லாம் பூசைகள் சிறப்பாய் செய்வித்தான். அச்சமயம் ஈசன் அரசனுக்கு தோன்றி "திருப்புன்கூர் என்னும் கரிஞ்சவன க்ஷேத்திரத்திலுள்ள சிவலோகநாதரை நீ கிரமப்படி பூசித்தால் மழையுண்டாகும்" என்றருள, வேந்தனும் மகிழ்ந்து தம் பரிவாரங்கள் புடைசூழ திருப்புன்கூர் வந்து சேர்ந்து சிவலோகநாதரையும் சௌந்தரநாயகியையும் வணங்கி பூசித்து பிரார்த்திக்கும்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கூட்டத்துடனே இவ்விடத்திற்கு வந்தார். சோழராஜன் அவரை வலம் வந்து வணங்கி நாட்டில் மழை மறுத்தமையால் சன்னிதியிற் பாடி மழை பெய்விக்கும்படி வேண்டிக்கொண்டார். சுவாமிகள் அவ்வாறு மழைபெய்வித்ததால் சிவலோகேசனுக்குப் பன்னிருவேலி நிலம் அளிக்கும்படி கட்டளையிட்டு சிவலோகநாதரையும் பாடவும், ஈசன் அருளால் சப்தமேகங்களும் சேர்ந்து மழை சொரிந்து எங்கும் வெள்ளப் பெருக்கெடுத்தது. அரசன் மகிழ்ந்து இனி மழை நிற்காவிடில் சேதம் மிகுமெனக்கண்டு மழையை நிறுத்துமாறு சுவாமிகளை வேண்ட, பின்னும் "பன்னிரு வேலி அளித்தால் நிறுத்துவோம்" என அரசனும் சம்மதித்தான்; மழையும் நின்றது; நாடும் செழித்தது. அவ்வளவுமகிமையுடையது இந்தக் கரிஞ்சாரண்யம்.

## சோழராஜன் பூசித்த படலம்.

பின்னர் இராஜேந்திரசோழன் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் இத்தலவிசேஷ முற்றும் கேட்டுணர்ந்து ரிஷப தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஈசனை வணங்கி ஆலயத் திருப்பணி பலவுஞ்செய்து சிவலோகநாதனைத் தோத்தரித்துத் தமக்கு புத்திர சந்தானமுண்டாக வரமும் பெற்று தன்னகருக்கு ஏகினான்.

---

## சந்திரன் பூசித்த படலம்.

பண்டு சந்திரன், தன் குருபத்தினியைப் புணர்ந்த தோஷத்தால் தன் கலைகளை யிழந்து தவிக்கையில் நாரத முனிவரால் திருப்புன்கூர் ஸ்தல மகாத்மியத்தைக் கேள்வியுற்று இத்தலத்திற்கு வந்து ரிஷப தீர்த்தமாடிச் சிவலோக நாதரையும் சௌந்தரநாயகியையும் வணங்கி, தன் கலைகள் வளரப்பெற்றான்.

---

## சூரியன் பூசித்த படலம்.

பூர்வத்தில் தக்கன் என்பவன் ஈசுவரனை மதியாமல் மற்றய விஷ்ணுவாதி தேவர்களைக்கொண்டு மகாயாகம் செய்யுங்காலத்தில் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து கோபக்கினியாலுற்பவித்த வீரபத்திரக் கடவுள் அந்த யாகத்திற்குச்சென்று தேவாதிகளைச் சிதறவடித்து, சூரியனுடைய பற்களையும் அடித்து உதிர்த்தார். அவ்வாறு பங்கமடைந்த சூரியன் பல தலங்களிற் சென்றும் பலனின்றி இத்திருப்புன்கூர் வந்து ரிஷப தீர்த்தமாடிச் சிவலோகேசனை வணங்கித் தோத்தரித்து அன்னவர் அருளினால் தன் பற்களை மீண்டும் பெற்று, தன் பெயரால் ஓர் இலிங்கம் பிரதிஷ்டை செய்து தன் பதிக்கேகினான்.

## அக்கினி பூசித்த படலம்.

முன் சொன்ன தக்கன் யாகத்தில் அவிர்ப்பாகம் வாங்கியுண்ட காரணத்திற்காக வீரபத்திரக் கடவுளால் அக்கினிதேவன் தனது கை வெட்டுண்டான். அக்கினி மிகுந்த கவலைகொண்டு இத்திருப்புன்கூர் வந்து சிவலோகநாதரைத் தரிசித்து வெட்டுண்ட கை முன் போலாகும்படி வரம்பெற்றான்.

---

## வானரங்கள் பூசித்த படலம்.

திரேதாயுகத்தில் ராமபிரான் ஸீதாபிராட்டியாரோடு வனவாசஞ் செய்தகாலத்தில் இராவணன் ஸீதையை எடுத்தேகினான். ராமனும் ஸீதையை தேடுவதற்காகச் சுக்ரீவனிடம் நட்புக்கொண்டு வானர சேனைகளைத் தென்றிசைக்கனுப்பினார். அவ்வானரங்களும் இக் கரிஞ் சாரண்யத்தின் மகிமையைக்கேட்டு இவ்விடம் வந்து சிவலோகநாதரைப் பூசித்து, தீர்த்தமாடி தோத்திரம் செய்து தாங்கள் போகும் வழியில் வயிறார உண்ணக் கனிகளைப்பெறவும், ஸீதாபிராட்டியாரைக் காணவும் வரம் பெற்றுச்சென்றனர்.

---

## பதஞ்சலி முனிவர் பூசித்த படலம்.

கைலாச பர்வதத்திற் சிவபெருமான் பிர்ம தேவருக்குக் கூறிய கரிஞ்சாரண்ய மகாத்மியத்தைக் கேள்வியுற்ற பதஞ்சலி முனிவர் திருப்புன்கூரை அடைந்து ரிஷப தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து சிவலோக்நாதரை தரிசித்து வேண்டிய வரங்களைப் பெற்றுச் சிதம்பரஞ் சென்றார்.

---

## வியாக்கிரபாத முனிவர் பூசித்த படலம்.

வியாக்கிரபாதமுனிவர் பிர்மதேவனால் திருப்புன்கூர் மேன்மையைக் கேள்வியுற்று வந்து ரிஷப தீர்த்தமாடி, ஸ்ரீசிவலோகநாதரையும் சௌந்திரநாயகியையும் பூசித்து வரம்பெற்று சிதம்பரத்திற்கேகினர்.

---

## சப்தகன்னியர் பூசித்த படலம்.

உமாதேவியார் மகிடாசூரனை சங்காரம் செய்தற் பொருட்டு முன் மூன்றுநாள் துர்க்கையாகவும், இடை மூன்றுநாள் இலக்ஷுமியாகவும் கடை மூன்றுநாள் சரஸ்வதியாகவும் உருக்கொண்டு ஈசனைப் பூசித்துத் தவஞ்செய்தாள். பத்தாம் நாள் சிவபெருமானிடம் வேண்டிய ஆயுதங்களைப் பெற்று மகிடா சூரனைக் கொன்றாள். பின்னும் இரத்த பீஜன், வன்னியா சூரன் முதலியவர்களைக் கொல்லக்கருதி சப்த கன்னியர்களாக உருக்கொண்டு திருப்புன்கூர் சிவலோகநாதரைப் பூசித்து வரம்பெற்று அவரை எதிர்த்துச் சமர்புரிந்து ஜயித்தாள். அச்சமயம் உமையவள் தங்கிய இடமே கன்னியாகுடி என்று இன்றும் வழங்கி வருகின்றது.

---

## சிற்சபேச சோழன் பூசித்த படலம்.

சோழதேசத்தை மநுநெறி தவறாது அரசு புரிந்தவர் களுள் மிகவும் கியாதிபெற்ற வீரவிக்கிரம சோழன் என்பவன் வெகுநாள் வரையிலும் மகப்பேறில்லாமல் வருந்தி அநேக யாகாதிகள் இயற்றியும் விரதங்கள் அனுஷ்டித்தும் ஆலயபூசைகள் புரிந்தும் பலன் காணாது தயங்கியிருக்கும் அளவில் பெரியோர்களால் இத் திருப்புன்கூர் மகிமையைக் கேள்வியுற்று தமது பத்தினிபரிவாரங்கள் சமேதனாய் கரிஞ்சாரண்ய

க்ஷேத்திரம் வந்து சேர்ந்தான். வந்து அந்தக்கரண சுத்தியோடு தன் மனைவியுடன் தானும் இடப தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சிவலோகநாதனையும் சௌந்தர நாயகியையும் தரிசித்து மகப்பேறு வேண்ட அவர் கிருபாகடாக்ஷத்தினால் நல்ல புத்திரனைப் பெற்று அவனுக்குச் சிற்சபா நடேசனென்று பெயரிட்டு மனமகிழ்ந்து தமது நகர்க்கேகினான். பின்னர் சிற்சபேசனுக்குத் தக்க வயது வந்தவுடன் முடிசூட்டி வைத்துப் பரகதியடைந்தான்.

சிற்சபாநடேச சோழன் செங்கோல் செலுத்திவரும் நாளில் தன் தந்தைக்குச் சந்தான வரமளித்த சிவலோகேசர் மகிமையைக் கேள்வியுற்று இத் திருப்புன்கூர் தலம் வந்து இடப தீர்த்தமாடி சிவலோக நாதரையும் சௌந்தர நாயகியையும் வலம் வந்து தரிசித்தான். அப்பொழுது அவ்வாலயத்திற் பணி செய்து வந்த சௌந்தரம் என்னும் தாசியின் அழகைக் கண்டு மயங்கி அவளைத் தொடர்ந்து அவள் பதிக்கேகி தன்காதலை தெரிவித்து ஏராளமான திரவியமளித்து அவளுடனேயே இருந்து சுகிக்கலானான். ஒரு நிமிஷமேனும் அவளைப் பிரிந்திருக்கச் சகியான். இப்படியிருக்கும் நாளில் அரசன் திருவாரூர் தியாகேசனைத் தரிசிக்க எண்ணினான். ஆனால் சௌந்தரமென்னும் தாசியைப் பிரிய மனமில்லாமல் அவளைக்கூடவே யழைத்தான். அவள் ஒரு நாளாயினும் சிவலோகேசன் தரிசனை இல்லாதிருக்கமாட்டேன். மற்ற தலத்தில் அள்ளிக் கொடுப்பதிலும் இத்தலத்திற் கிள்ளிக் கொடுப்பதே மேலென்று எண்ணுவேன் என்றாள். அரசனும் மனங் கலங்கி ஒருவாறுதேறி தென்றிசை நோக்கி தன்னகரம் செல்லலானான். அரசன் சென்றவுடன் அத்தாசி தனது வீட்டிற்குள் சென்று பார்க்க அரசன் தனக்குக்கொடுத்த ஆபரணங்களைக் காணமற் கலங்கி

அரசனைப் பின்தொடர்ந்து சென்று தன்னுபரணங்களைக் கொடுக்கும்படி கேட்டாள். அரசன் காரணமறியாது தனக்கதைப் பற்றி ஒன்றும் தெரியாதென்றுரைத்தும் தாசி விடாது அவனைச் சிவலோக நாதர் சந்நிதியிலிருக்கும் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அவர் சந்நிதியில் பிரமாணம் செய்து தர வேண்டுமென்று சொல்ல; மன்னனும் சம்மதித்து திருப்புன்கூர் வந்தான். தீர்த்த முழுதும் இரத்தமயமாய் இருக்கக்கண்டு அதில் மூழ்க மனம் சகியாதவனுய் பலிபீடத்தருகில் நின்று பிரமாணம் செய்கையில் அவ்விடமிருந்த துவாரபாலகர்களுள் ஒருவன் பாம்பாக மாறினுன். மற்றொருவன் கருடனுக மாறி அப்பாம்பை எடுத்து சோழராஜன் கழுத்திலிட்டான். அரசன் நடுங்கி சிவலோகேசனை தோத்தரித்து தனக்குற்ற பழியை நீக்கிப் பாம்பை விலக்கினுல் வேண்டியபொருள், பூமி அளிப்பதாகச் சொன்னவுடன் அந்த சர்ப்பமானது மறைந்தது. அரசனும் மகிழ்ந்து சிவலோகநாதருக்கும் சௌந்தரநாயகிக்கும் அளவில்லாத ஆபரணங்களும் நித்திய நைவேத்திய படிக்கட்டளைகளுக்காக பூமியும் கொடுத்து நந்தவனங்கள் ஏற்படுத்திப் பூசைகள் நாகப்பிரதிஷ்டை முதலியன செய்வித்துத் தன்னகருக்கேகினுன்.

---

## விறன்மிண்ட நாயனுர் பூசித்த படலம்.

வேளாளர் குலத்தில் அவதரித்த விறன்மிண்ட நாயனுர் அநேக தலங்களையும் தரிசனம் செய்து திருவாரூர் என்னும் தலத்திற்றங்கி இருந்த நாளில் பரவைநாச்சியாரிடம் தியாகேசனைத் தூதாகச் செல்லுவித்த சுந்திரமூர்த்தி சுவாமிகள்மீது கோபங்கொண்டு அத்தலத்தை விட்டு நீங்கி இத்திருப்புன்கூர் வந்து சிவலோகநாதரைப் பூசித்துத் தவமியற்றி இதையே வாசஸ்தலமாகக் கொண்டிருந்தார்.

## நந்தன் தரிசித்த படலம்.

இத்திருப்புன்கூருக்குச் சமீபமாக மேலாதனூர் என்று ஒரு கிராமம் உண்டு. அதில் பஞ்சம ஜாதியில் நந்தனூர் என்பவர் பிறந்தார். அவர் சிவபக்தியிற் சிறந்த சிவாலயங்கள் தோறும் சென்று வணங்கி அவ் வாலயங்களில் நகரா, மத்தளம் முதலியவைகளுக்கு வாரும், தோலும் ஈசுவரனுக்கு, கோரோசனை முதலியன வும் சேகரஞ் செய்துகொடுத்தும் சிவனடியார்க்கு திருத்தொண்டு செய்துவரும் நாளில் திருப்புன்கூர் சிவலோகேசரை தரிசிக்கும் பொருட்டு வந்து தான் பஞ்சம ஜாதியினராதலால் தேரடியில் நின்றூர். ஆலயத்தில் ஈசுவரனை மறைத்துக்கொண்டுபர்வதாகார மாக நந்தி ஒன்று இருக்கக்கண்டு, ஈசுவரனைத் தரிசிக்க முடியாமல் வருந்தி சிவலோகநாதரைத் தோத்தரித்தார். கடவுளும் அவர் பக்திக்கு மகிழ்ந்து நந்தியைச் சற்று விலகியிருக்கும்படி கட்டளையிட்டார். உடனே நந்தி வடபார்சுவமாக ஒதுங்கியது; நந்தனூர் சிவலோக நாதரைக் கண்டார்; ஆனந்தக் கூத்தாடினூர்; இடப தீர்த்தத்தை வெட்டி சீர்ப்படுத்த நினைத்தார். தனக்கு உதவிசெய்ய ஒருவரும் வரவில்லை. ஈசனைத் தியானித்தார்; சிவலோகநாதர் நந்தனூர் பக்திக்கு மகிழ்ந்து விநாயகரையழைத்து, நந்தனூருக்கு உதவி செய்யும்படி அனுப்பினூர். கரிமுகனும் தட்டு மண் வெட்டியுடன் வந்து நந்தனூரிடம் தானே குளத்தை வெட்டுவதாக ஒப்புக்கொண்டு, தன் பூதகணங்களை விட்டுச் சிறிது நேரத்தில் குளம் வெட்டிச் சீராக்கி மறைந்தார். நந்தனூர் ஆனந்த பரிதனூர். பின்னர் தில்லைக்குச்செல்ல விருப்பங்கொண்டு நாளைப் போவேன் நாளைப் போவேன் என்றிருந்தாராதலால் இவருக்கு "திரு நாளைப்போவார்" என்று பெயருண்டா யிற்று. தில்லை நடராஜர் உத்திரவின் பேரில் தில்லை

வாழந்தணர்கள் நந்தனரை அக்னியில் மூழ்கச் செய்து ஆலயத்திற்குள் அழைத்துச் செல்ல, அங்கே நந்தனர் ஜோதியோடு கலந்தார்.

---

## ஏயர்கோன் கலிக்காம நாயனர் படலம்.

இத் திருப்புன்கூர் க்ஷேத்திரத்திற்குச் சமீபத்தில் பெருமங்கலம் என்னும் ஊரிலே வேளார் குலத்திலே ஏயர் கோன்குடியிலே கலிக்காமநாயனர் என்னும் ஒருவர் இருந்தார். அவர் சிவபக்தியிற் சிறந்து சிவலோகநாதரை தினமும் தரிசித்து, ஆலயத்திருப்பணி கள் பலவும் செய்து வந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் எழுந்தருளிய காலத்தில் அங்கு ஈசனையே பரவை நாச்சியாரிடம் தூதாக அனுப்பியதைக் கேள்வி யுற்று மனம்வருந்தி தியாகேசரையும், சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் மிகவும் நிந்தனை செய்துகொண்டிருந்தார். தியாகேசர் இதையறிந்து இவருக்கு சூலைநோயை உண்டாக்கி நாயனரைக் கொண்டு அதை தீர்க்கத் திருவுளம் கொண்டார். கலிக்காமர் சூலைநோயால் மிகவும் வருந்தினர். ஈசுவரர் கட்டளைப்படி சுந்தர மூர்த்திசுவாமிகள் நாயனர் நோயைநீக்கப் பெருமங்கலம் நோக்கி வந்தார். கலிக்காம நாயனர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருகையைக் கேட்டுத் தாமனுபவித்து வரும் நோயின் கொடுமையைக் காட்டிலும் சுந்தர மூர்த்திகளைக் காணநேரிடும் கொடுமை பெரிதென மதித்துத் தம் உடை வாளால் வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அத்தலம் சென்று அவரைக் காணும் விருப்பமிகுதியால் அவர் எங்கே என்று வினவ, பலர் வேறுவிதமாக சொல்லியும் கேளாததால் இறந்து கிடக்கும் நாயனரைக் காண்பித்தனர். சுந்தரமூர்த்திசுவாமிகள் அவரைப் பார்த்தவுடன் என்மீது இவர் தீர்க்க வைராக்யம்

கொண்டு இறந்ததால் நானும் இறப்பேனென்று உடைவாளை யேந்தவே, கடவுள் அருளால் கலிக்காம நாயனுர் உயிர்பெற்று எழுந்து சுந்தரமூர்த்திகளுடன் நேசமாகித் திருப்புன்கூர் வந்து சிவலோக நாதரையும், சௌந்தர நாயகியையும் தரிசித்து, ஏனைய சிவத்தலங் களுக்கும் சென்று பிறகு சிவலோகநாதர் திருவடியிற் கலந்தார்.

ஆகவே இக்கரிஞ்சாரண்யம் என்னும் திருப்புன்கூர் தலத்தின் மேன்மையைச் சொல்லச் சொல்ல விரியும். இவ்வூரைச் சுற்றிலும் இந்திராதி தேவர்களால் இயற்றப் பட்ட தீர்த்தங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்ட இலிங் கங்களும் அனேகம் உண்டு. ஒரு தினம் இவ்வூரிலுள்ள இடப தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ சிவலோநாதரை யும் ஸ்ரீ சௌந்தரநாயகியையும் தரிசித்து ஓர் இரவு இத்தலத்திற்தங்குவோர் இகபர சாம்பிராச்யங்களைப் பெற்று அரோக திடகாத்ரசரீர முடையவர்களாய்ப் புத்ர பௌத்ர களத்திர சம்பத்துக்களுடன் வாழ்வார்கள் என்று சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளுக்குச் சொன்னுர்.

நாதனுஞ் சிவலோகப்பேர் நாயகன் பாதம்வாழி!
மாதெனும் சௌந்தரப்பேர் வல்லியோ டிருவர்வாழி!
வேதமு மகமும் வாழி! விண்ணுறு மாரிவாழி!
பூதலத் தறம் விளங்கப் புரவலன் செங்கோல்வாழி!

---


இத் திருக்கோயில் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய பாதுகாப்புத் துறையினரின் நேரிடையான ஆளுகைக்கு உட்பட்டது. திருக்கோயிலை நிருவாகம் செய்ய ஒரு "ஸ்கீம்" ஏற்படுத்தப்பட்டு அதன்படியே நிருவாகம் செவ்வனே நடைபெற்று வருகிறது.

---

தர்மகர்த்தர்கள்:

G. ராதாகிருஷ்ண பிள்ளை, M.A., B.L.,
T. RM. CT. லெட்சுமணன் செட்டியார்
S. N. சீனுவாச ரெட்டியார்

S. சுப்பையா,
நிர்வாக அதிகாரி.



நந்தன் குளமும், மேலக்கோபுர வாயிலும்



தலவிருக்ஷம் (புங்கமரம்)



திருநாளைப்போவார் நாயனர்
(நந்தனர்)

கா. 2500] [தேதி 31—1—62
விக்டோரியா (பவர்) பிரஸ், மாயூரம்.